

# பித்தன்

கவிஞர்திலகம் கலைவாணன்

# பித்தன்

ஆசிரியர்

கலைவாணன்.

கலைவாணன் பதிப்பகம்
திருவானைக்கா,
திருச்சிராப்பள்ளி-620 005.

## ஆசிரியரின் பிற நூல்கள்

1. உதயம் - காவியம்
2. காவை முருகன் பிள்ளைத்தமிழ்
3. விட்டில்
4. மனச்சிமிழ்
5. நிவேதனம்
6. அழியா அழகி
7. காவிரி முதலியன ...

## ஆசிரியரைப் பற்றி … …

கவிஞர் திலகம் கலைவாணன் அவர்கள் 3—10—1917இல் பிறந்தவர். தம்முடைய பத்தொன்பதாம் ஆண்டிலேயே கவிதை எழுதத் தொடங்கி, கவிதை உலகில் தமக்கென ஒருவழியை வகுத்துக் கொண்டவர். பண்டைய இலக்கண மரபு குன்றாது புதுமைப்பொலிவோடும் பொதுமைக் கருத்தோடும் கவிதை ஆக்க வல்லவர். பலமொழி இலக்கியங்களிலும் ஆழ்ந்த பற்றும் தெளிந்த புலமையும் கொண்டவர். எனவே இவர்தம் கவிதைகள் பழமைக்கும் புதுமைக்கும் பயனுள்ள பாலமாக விளங்குகின்றன. காந்தீயத்தில் அசைக்கமுடியாத பற்றும் உறுதியும் கொண்ட இவர் எளிய தோற்றம், இனிய பேச்சு, தெளிந்த சிந்தனை முதலிய சிறப்பியல்புகளைக் கொண்டவர்.

உதயம், மனச்சிரிப், ஜீவானந்தம், நிவேதனம், விட்டில், அரிய அழகி, காவிரி, காவை முருகன் பிள்ளைத் தமிழ் முதலியன இவரது பிற படைப்புகள். 1963ஆம் ஆண்டு தில்லியில் நடைபெற்ற பன்மொழிக் கவியரங்கில் தமிழ்மொழிக் கவிஞராகப் பங்கு கொண்டார். 1971இல் பாவலர் மன்றத்தினரால் 'கவிஞர் திலகம்' எனப் பட்டம் சூட்டப் பெற்றார். தமிழகத்தில் பல கவியரங்குகளில் தலைமை தாங்கித் தமிழன்னைக்குத் தொண்டாற்றி வருகின்ற இவரது வாழ்க்கை தற்கால இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையக்கூடிய பெருமை கொண்டதாகும்.